# மெட்ரோ ரயிலில் கல்விச் சுற்றுலா

**சென்னை**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், மாதந்தோறும் அரசு பள்ளி மாணவர்களை இலவசமாக கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்கிறது. இதன்படி, வேளச்சேரியில் உள்ள சென்னை மேனிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் 300 பேர் நேற்று மெட்ரோ ரயிலில் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் ஆலந்தூர் முதல் சென்னை சென்ட்ரல் வரை மெட்ரோ ரயிலில் பயணம் செய்தனர். அப்போது, மெட்ரோ ரயில் இயக்கப்படும் விதம் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வசதிகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இந்த ஆண்டு அரசு பள்ளிகள் தவிர அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு பெண்கள் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவிகளும் மெட்ரோ ரயிலில் இலவச கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். கடந்த ஆண்டு சென்னையில் உள்ள 60 பள்ளிகளை சேர்ந்த 31,178 மாணவர்கள் மெட்ரோ ரயிலில் அழைத்துச் செல்லப்பட்டனர் என மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.